(௨)

உ

கடவுள் துணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு—௧. } பிங்கள ஆண்டு ஐப்பசிமீ { மதி—௧.

உள்ளுறை.

		பக்கம்.
௧	— தமிழ் மகவு	௧.
௨	— பத்துப்பாட்டு	௪
௩.	— அக்குரோணி என்பது	௭.
௪	— வசனக்குறிகள்	௯.
௫	— கம்பர் சரித்திரம்	௧௦.

பத்திராசிரியர் வீ — துரைசாமி முதலியார்
கவர்ன்மெண்ட் கல்விச்சாலைத்
தமிழ்ப்பண்டிதர்
(முதலியார் பேட்டை.)
புதுவை.

வருட்சந்தா விவரம்.

உள்ளூர்க்கு	ரூ — ௨	வெளிநாட்டுக்கு	ரூ — ௪
வெளியூர்க்கு	ரூ — ௩	தனிப்பிரதி	அணா — ௪

புதுவை - வித்தியாபிவர்த்தனி அச்சுக்கூடம்.

புதுவைத்தமிழ்ச்சங்கத்தின் வாழ்த்து.

திருக்கோவலூராதீனம் புலிசை, ஸ்ரீமத் ஞானியார் மடாலயம்
ஸ்ரீ லஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய
சுவாமிகளருளியது.

வெண்பா.

கொன்றையணி செஞ்சடையெங் கூத்தற் குயர்பொருளை
அன்றுணர்த்து நாத னருட்பெருக்கால் — என்றும்
"புதுவைத் தமிழ்ச்சங்கம்" புல்குகவே நற்சீர்
துதியர் நிறைநலனுஞ் சார்ந்து.

சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர்,
மகாமகோபாத்தியாயர்
பிரம்மஸ்ரீ வே - சாமிநாத ஐயரவர்கள்,
"புதுவைத் தமிழ்ச்சங்கப்" சபாநாயகர் அவர்கட்கெழுதியது.

தாங்களும் மற்றஅன்பர்களும் சேர்ந்து அமைத்திருக்கும் "புதுவைத் தமிழ்ச்சங்கம்" எல்லாவகையிலும் மேன்மேலும் வளர்ச்சியுற்றுவிளங்கும்படி செய்வித்தருளும்வண்ணம் ஸ்ரீ ஆனந்த நடராஜனைப் பிரார்த்திக்கிறேன்.

சித்தாந்த சரபம்-அஷ்டாவதானம்,
சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திரரவர்கள்,

விருத்தம்.

பன்னரிய வாயிரமா யிரம்வருட மாகவிப்பாரதகண்டந்
தன்னிலுயர் தனிமொழியா யொப்பிலதாயமுதென்னத்தழங்காநின்ற
மன்னுதமி ழின்பெருமை விளங்கிடவே பெரும்புலமைவாய்ந்தசான்றோர்
நன்னலஞ்சூழ் புதுவையினிற் றாபித்ததமிழ்ச்சங்க நாளும் வாழ்க.

சுவாமி விருதை சிவஞானயோகிகள்

வெண்பா.

திருத்தமிகும்புதுவைச் செய்யதமிழ்ச் சங்கம்
பருத்துச் சிறந்தோங்கப் பண்ணி — யருட்டருக
பொன்னார்நன் மேனிப் புரிசடையன் றிங்களணி
தென்னனெனு முக்கட் சிவன்.

ஸ்ரீ

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு- க. | பிங்கள ௵ ஐப்பசி ௴ | மதி-க.

தமிழ்த் தெய்வ வணக்கம்.

மறைமுதற் கிளந்தவாயான் மதிமுகிழ் முடித்தவேணி
இறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணம் செய்யப்பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும் வென்றாரியத்தோ
டுறழ்தருதமிழ்த் தெய்வத்தை யுண்ணினைந் தேத்தல்செய்வாம்.

தமிழ் மகவு.

பூவுலகத்திற் றோன்றிநிலவும்பாஷைகள் பலவற்றினும், தமிழும், ஆரியமுமே படைப்புக்காலந் தொட்டுத்திரியாது பயின்றுநின்றியலும் பான்மையுடையனவென்பது, தொல்லையாசிரியர் யாவருங் கொண்டதுணிபாம். இவற்றில் தமிழியல் சிறிதே சாற்றுவாம்.

இந்து மகாசமுத்திரத்திலுண் மூழ்கின பூமி எ00-காவதம் (எ000-மைல்) பரந்துகிடந்தபகுதி, ஆதியில் தமிழகம் எனப்பட்டிருந்தது. அங்கிலத்துத்தென்பாற்கண்ணதாயமதுரையில்-சசச0-யாண்டுகள் தலைச்சங்கமிருந்தது. அத்தமிழகத்தின் கண்ணதாய கபாடபுரத்தே இடைச்சங்கம்-ஙஎ00-யாண்டுகள் நடந்தேறிற்று. அக்காலத்துப் பாண்டிநாட்டைக் குமரிக்கோட்டொடு கொடுங் கடல் கொண்டது. பிறகு உத்தரமதுரையில் கடைச்சங்கம்-கஅரு0-யாண்டுகள் நிகழ்ந்தது. இக்கடைச்சங்கத் திறுதிக்காலம் கி-பி-ச0-வரை இருந்ததெனப் புலனாகின்றமையான், தலைச்சங்ககாலம் இற்றைக்கு-ககக00-யாண்டுகட்கு முன்னரெனத்தெளிவாம். இதனாற் றமிழின் றொன்மைநிலையோர்க.

முதற்சங்ககாலத்திலே, மகத்துவமுடைய அகத்தியனார்தம் பெயரானேரிலக்கண நூலமைத்தனர். அஃது இடைச்சங்ககாலத் திறுதியில் மறைந்தது. இடைச்சங்கத்து முதற்காலத்தெழுந்த தொல்காப்பியமே, இன்றும் நின்று நிலவுவதாயிற்று.

தமிழ்-இனிமை. அஃது இங்குச்சிந்தைக்கினிய, செவிக்கினிய வாய்க்கினிய ஆய ஒருபாஷைக்குப் பெயராயிற்று.

"பண்ணிடைத் தமிழொப்பாய் பாட்டினிற் சுவையொப்பாய்" (சு-தேவாரம்.) "தமிழினுமினிய தீஞ்சொல்" (நைடதம்.) "தமிழ் தழியசாயலவர்." (சீவகசிந்தாமணி.) "தமிழெனப் தினிமை நீர்மை" (சூடாமணி நிகண்டு.) என்பவற்றால், இனிமையென்பதே, தமிழெனற் குப் பொருளாதலறிக.

"செஞ்சடைக் கற்றைமுற்றத் திளநிலாவெறிக்குஞ் சென்னிய், பெருமான் மாடக்கூடன்மாநகர்க்கண்ணே, "மன்றன்மா அத்தார்க்குன் றெறியிளஞ்சேய் - திண்டிறற்புலமைக் குண்டிகைக் குறுமுனி" முதலியோருடனிருந்து முதலூழியிறுதிக்கண் ஆராய்ந்த பெருமைபெற்றது இத்தமிழே.

திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளே, தமிழ்ச்சங்கத்திற்குக் காரணர்என்பது, "அற்றன்றி யந்தண்மதுரைத் தொகையாக்கினும்" என்ற திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவாக்கானும், நக்கீரரும், அடியார்க்கு நல்லாரும், கூறுமாற்றானுந் தெளிக.

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்துமென் சிந்தையுள்ளு முறைவானுயர்மதிற் கூடலினாய்ந்த வொண்டீந்தமிழ்" (திருக்கோவையார்.) "கண்ணுதற்பெருங்கடவுளுங் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப் பசுந்தமிழ்" (திருவிளையாடல்.) என்பவற்றால் இறைவன் றமிழாராய்ந்த சிறப்பறிக.

தமிழ், தென்பாலுள்ள ஏனையபாஷைகளின் பிறப்பிடமாயும், ஆரியம், வடபாலுள்ள பிறபாஷைகளின் பிறப்பிடமாயும் விளங்குதலின் தமிழைத் தென்மொழியெனவும், ஆரியத்தை வடமொழியெனவும் தலைமைதோன்றக் கூறுவர் சான்றோர். தமிழும், ஆரியமும் கண்ணுதற் கடவுள்பாற்றோன்றிய இருமகவுகளே. தமிழிற்கு அகத்தியரும், ஆரியத்திற்குப் பாணினியும் செவிலித்தாயரென்னலாம்.

தமிழை அகத்தியர்படைத்தார் என்று கூறுவோர் மொழி பொருந்தாது. யாங்ஙனமெனின், "தண்ணார்தமிழளிக்குந் தண் பாண்டிநாட்டான்" என்ற திருவாசகத்தானும், "தமிழ்ச்சொல்... உணர்த்துமவனை யுணரலுமாமே" என்ற திருமந்திரத்தானும், "இருமொழிக்குங் கண்ணுதலே முதற்குரவர்" என்றகாஞ்சிப்புராணத்தானும், "முத்தமிழ்நான்மறை முனைத்தருள் வாக்கால்" என்ற கல்லாடத்தானும், "என்றுமுளதென்றமிழ்" "தழற்புரைசுடர்க் கடவுடந்ததமிழ்" என்ற கம்பராமாயணத்தானும், சிவபிரானிடம் அகத்தியர் "விடைகொடுபோவாரென்றை வேண்டினேனுந் தேயம் - தொடைபெறு தமிழ்நாடென்று சொல்லுப வந்தநாட்டி-னிடைபயின் மனிதரெல்லா மின்றமிழாய்ந்து கேள்வி - யுடையவ ரென்ப கேட்டார்க்கு முரைத்தல்வேண்டும்" என்றபடி வேண்டித்தமிழ் இயலை அறிவுறுத்தப்பெற்றமையானும், மழுவலக்கரத்து முழுமுதற்கடவுளே படைத்தளித்துப் பாரிற்பரப்பின சிறப்பினது இத்தமிழெனத் தெளிக.

ஆரியம் உச்சரிப்பின் வன்மையானும், வேதாகம அதிகாரத்தானும், மந்திரோபதேசவாய்ப்பினானும் ஆடூஉ (ஆண்) வியல்பிற்று

தமிழ், குயிலோ கிளியோ குழலோ தேனோ
கரும்போ பாலோ கண்டோ அமிழ்தோ

அன்றி, இனியவெல்லாஞ் சேர்த்துக்காய்ச்சி இளஞ்சூட்டினிறக்கிவைத்த இன்பரசப்பாகோ? எனப் பாவலரும் நாவலரும்பலவாறுபன்ன, கண்டாரும் கேட்டாரும் களிதூங்க, கொண்டாரும் கொடுத்தாரும் குதூகலிக்கக் குலவுவதுடன் இன்மொழியும், மென்னடையும், சொல்லணியும், பொருள்வளனும், இயலிசை நாடகப் பகுதிகளும், தேவார திருவாசகமுதலியவற்றால், கண்ணுதற்கடவுளுக் கண்மயங்கும் வசீகரமும் வாய்ந்து தன்னைச்சார்ந்தவர் பொருளொடுபோகமும் ஏகமாகுமின்பமும் எய்தும்படி இருத்தலின் மகடூஉ (பெண்) வியல்பிற்று.

இது குறிக்கன்றோ?
"வண்டமிழ் மடந்தை"
"செந்தமிழ்ப் பாவை"
"வையையேட்டிலே தவழ்ந்த பேதை"
"தென்னிசான் மடமகள்,,

என்று சாற்றினர் சான்றோர்.

இனி, அருந்தமிழ், இன்றமிழ், ஒண்டமிழ், செந்தமிழ், தீந்தமிழ், பசுந்தமிழ், மாண்டமிழ், வண்டமிழ் முதலிய அடையுடைத்தாய் வழங்குதலான் இத்தமிழின் மென்மை முதலிய நன்மை விளங்கிக் கிடத்தல் காண்க.

இத்தமிழ்மாதுக்குத் தேவாரம், திருவாசகம், திருக்குறள், நாலடியார், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய இலக்கியங்களும், தொல்காப்பிய முதலிய இலக்கணங்களும் பேரணி கலமாகப் பிறங்கிக் கிடக்கின்றன.

திருவாலவாய்ச் சோமசுந்தரக்கடவுளே, "அன்பினைந்திணை" என எடுத்து அறுபது சூத்திரத்தால், இலக்கணமமைக்கப்பட்ட ஏற்றமுடைய இத்தமிழிற் சிறந்ததொருபாஷை வேறுஉண்டோ? இனி, "தமிழ் ஆராய்ந்த சங்கத்தார்முன் அக்கண்ணுதற்பெருமானே, தமிழைக்குறித்துப் பேசத்தொடங்கி, "உரையிழந்து விழித்தார்" என்னின், சில்வாழ்நாட்பல் பிணிச்சிற்றறிவுடையயாமோ? இத்தெய்வத் தீந்தமிழின் சிறப்பைச் செப்பவல்லேம்.

(தமிழைக்குறித்துப் பல அறிஞர்கள் பலவிபரங்களெழுதி வெளியிட்டிருத்தலானும், விரிவஞ்சியுஞ்சிலமுக்கியவிஷயங்களையே ஈண்டெழுதலாயிற்று.)

இத்தகைய அமிழ்தினுமினிய தமிழைப் பண்டைக்காலத்துப் பாண்டியர்களே வளர்த்தனர். பின்னைச் சேர, சோழர்களும் சிறப்புறச் செய்தனர். அதன்பின்னர் மடாதிபதிகள், சில சிற்றரசர்கள் அநேக பிரபுக்கள், அருந்தமிழணங்கின் பெருந்தகை கெடாமல் ஆதரித்துவந்தனர். தற்போதோ, இராசாங்கத்தாருடைய ஆதரவின்றியும் முன்னை ஞான்றுபோன்று பெருஞ்செல்வர்கள் அருந்துணையின்றியும் தமிழ்மாது தன்கவினிழந்து புன்கண்கொண்டு என்செய்வலென்று தவிக்கின்ற தன்மையை எவர் அறியாதார்?

அந்தோ! இத்தமிழ்மடந்தையின் தன்மை இவ்வாறாவதோ? நாமெல்லாம் தமிழ்மக்களாயிருக்கின்றோமே! தமிழிற் பிறந்து தமிழில் வளர்ந்து தமிழ் பயின்று தமிழ்ச்சுவையறிந்து தமிழகத்தமர்ந்து நமது சிறார்களையும் அவ்வாறே தமிழிற் பயிற்றவும் இருக்கும் நாம் தூமொழியாய தாய்மொழியைப் பராமுகஞ்செய்வது

பண்போ? ஊக்கமற்றிருத்த லுறுதியோ? தளரவிட்டிருப்பது தகுதியோ? நமக்குள்ளே ராஜர்க ளின்றெனினும், மகாராஜர்கள் இருக்கின்றார்களன்றோ? அவர்கள் நந்தமிழை வளர்க்கமாட்டாதவர்களா? அச்செல்வர்கள் பலர்கூடிக் கவனிப்பின், இஃதோர் அரிய காரியமன்றே? மாசுண்டமணிபோற் கிடக்கின்ற நந்தமிழ்வனிதை எழில் இன்னும்கெடும்போலுமெனத் தோற்றியபின்னுந் தமிழ்மக்கள் தாமதிப்பார்களா?

தமிழை வளர்த்தற்கென்றும் கூடியவரையில் முன்னைய நன்னிலையினின்று சீர்குலையாது பாதுகாத்தற்கென்றும், தற்போது மதுரை முதலிய இடங்களில் " தமிழ்ச்சங்கம்" வைத்து நடாத்துகின்றார்கள். இப்புதுவையினும் அவ்வாறோர்சங்கம் இருத்தல்வேண்டியதவசியமாம் என்று எண்ணி, தமிழ்க்கல்விச்சாலை வைத்தல், புத்தகசாலைவைத்தல், பத்திரிகைவாயிலாகப் பலவிஷயங்களைவெளியிடுதல், பழயபுத்தகங்களை அச்சிடல், உபந்நியசித்தல், முதலியவற்றால் தமிழைப்பாதுகாத்து வளர்த்தற்கென்றே பலநன்மக்கண் முயற்சியால், புதுவை, வேளாளர் வீதி ஸ்ரீ ஈந்திதேவாலயத்தில் "தமிழ்ச்சங்கம்" என்றோர்சபை ஆரம்பிக்கப்பெற்றுளது.

ஆண்டுத்தமிழணங்கு இப்பத்திரிகையாகியமகவைப்பயந்தனள். (காகித அளவினானும், தமிழ்பயில்வோர் முதலில் உணர்த்தக் கனவற்றை வரையப்பெறுதலானும், பெற்றோர்க்குச் செய்யுங் கடனுக்குப்பிள்ளை உரிமைபாயவாறுபோல, தமிழ்க்குரியகடன்யாவுந் தனக்குரிமை கொண்டமையானும், இனி மேன்மேலும் வளரு நோக்கமுற்றமையானும், தமிழ்க்குழந்தைஎன்று, பொருள்படுந் தமிழ்-மகவு-என்பது இப்பத்திரிகையின் நாமமாயிற்று.)

இத்தமிழ்மகவைத் தமிழராயினோர் ஒவ்வொருவரும் காக்கக் கடமைப்பட்டவர்களே. ஆகலின், தமிழபிமானிகள்யாவரும் மாதம் ஒருமுறையேனும், இம்மகவைக் கையாலெடுத்துக் களிப்புற்று இதனிடத்துண்டாம் மழலைமொழிகளால் மகிழ்வார்களாகுக.

இங்ஙனம்,

பத்திராசிரியர்.

பத்துப்பாட்டு.

இது, பத்துவகை நூற்கள் ஒருசேரத் திரட்டப்பட்ட ஓர் புத்தகத்தின்நாமமாம். ஒவ்வொருநூலும்ஒவ்வோர்பாட்டானே முடிந்தமையான், இப்பெயர் எய்திற்று.

௧-திருமுருகாற்றுப்படை. (நக்கீரனார்பாடியது)
௨-பொருநராற்றுப்படை. (முடத்தாமக்கண்ணியார்பாடியது.
௩-சிறுபாணாற்றுப்படை. (நத்தத்தனார்பாடியது)
௪-பெரும்பாணாற்றுப்படை. (உருத்திரங்கண்ணனார்பாடியது.)
௫-முல்லைப்பாட்டு. (நப்பூதனார்பாடியது.)
௬-மதுரைக்காஞ்சி. (மாங்குடிமருதனார்பாடியது.)
௭-நெடுநல்வாடை. (நக்கீரனார்பாடியது.)
௮-குறிஞ்சிப்பாட்டு. (கபிலர்பாடியது.)
௯-பட்டினப்பாலை. (உருத்திரங்கண்ணனார்பாடியது.)
௧௦-மலைபடுகடாம். (பெருங்கௌசிகனார்பாடியது.)

இவற்றின் பெயரும், முறையும்.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக்காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத் தொடும் பத்து.

இவ் வெண்பாவா லறிக.

பத்தையும் ஒன்றாகத் தொகுத்தோர் கடைச்சங்கப் புலவர்களே. பழைய இலக்கிய இலக்கண நூலகளில், உரைவகுத்தோர்களால் உதாரணமாக எடுத்தாளப்பட்ட சிறப்புடையன இவை.

தமிழ்க்கேஉரிய ஒழுக்கமுதலியவற்றை இனிதுவிளக்கி, உள்ளவற்றை உள்ளவண்ணமே உரைத்து இன்பம் பயக்கும் எழிலுடையனவையா யிருத்தலின்,

"ஆன்றோர் புகழ்ந்த அறிவினிற் றெரிந்து
சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரியல்
ஒருபது பாட்டே" எனவும்,
"பத்துப்பாட்டாதி மனம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையா இலக்கணமில் கற்பனையே" எனவும்;
பாராட்டிக் கூறப்பட்டவை, இப் பத்துப்பாட்டே.

முதலாவது, திருமுருகாற்றுப்படை:- இது, இணைக்குறளாசிரியப்பாவா னமைந்தது. ௩௧௭-அடிகளுடையது. முத்தியுறுதற்குற்ற இரவல னொருவனை, வீடுபெற்ற ஒருவன் முருகக்கடவுளிடத்து ஆற்றுப்படுத்தி(வழிப்படுத்தி) யதாகப்பாடப்பட்டது. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், (திருச்செந்தூர்) திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்னும் ஆறுதிருப்படைவீட்டின்கண்ணும், முருகர் எழுந்தருளியிருத்தலை எழில்பெறவிளக்கும்.

ஓர் கொடியபூதத்தைவெல்லும்பொருட்டுப்பாடப்பெற்றதிது. சீகாளத்திப்புராணத்தில் நக்கீரச்சருக்கத்தால்இவ்வரலாறு இனிது விளங்கும்.

"பிணிபகை மிடி இடுக்கண் பேயினைக் கனவுகள்வர்
பணி விடமொழிக்கும் ஆற்றுப்படை" எனவும்,
"உன்னிய உன்னியாங்கிங் குதவுவ தாகிப்பாவுண்
முன்னுற வந்துநிற்கு முருகாற்றுப்படை" எனவும்,
கூறுமாற்றான், இந்நூலின் பெருமை யோர்க.

முருகக்கடவுள் அருள்பெறவிரும்புவோர், இத்திருமுருகாற்றுப்படையை நாடோறும் அன்புடன் பாராயணம் செய்யக்கடவர்.

"நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாம் தரும்.

(தொடரும்.)
பத்திராசிரியர்.

அக்குரோணி.

பத்தி, சேனாமுகம், குன்மம், கணம், வாகினி, பிரதனை, சமூ, பிரளயம், சமுத்திரம், சங்கு, அனிகம், அக்குரோணி, எனப் பனிரண்டுவகைகளும், சேனைகளின் பண்டைக்காலத்துப் பாகுபாடாம்.

அவற்றுள்—பத்தி ௩-கொண்டது சேனாமுகம். அது ௩-கொண்டது குன்மம். அது ௩-கொண்டதுகணம். அது ௩-கொண்டது வாகினி. அது ௩-கொண்டது பிரதனை. அது ௩-கொண்டது சமூ. அது ௩-கொண்டது பிரளயம். அது ௩-கொண்டது சமுத்திரம். அது ௩-கொண்டது சங்கு. அது ௩-கொண்டது அனிகம். அது ௩-கொண்டது அக்குரோணி.

அவை வருமாறு—

பெயர்.	யானை	தேர்	குதிரை	காலாள்
பத்தி—	௧	௧	௩	௫
சேனாமுகம்—	௩	௩	௯	௧௫
குன்மம்—	௯	௯	௨௭	௪௫
கணம்—	௨௭	௨௭	௮௧	௧௩௫
வாகினி—	௮௧	௮௧	௨௪௩	௪0௫
பிரதனை—	௨௪௩	௨௪௩	௭௨௯	௧௨௧௫
சமூ—	௭௨௯	௭௨௯	௨௧௮௭	௩௬௪௫
பிரளயம்—	௨௧௮௭	௨௧௮௭	௬௫௬௧	௧0௯௩௫
சமுத்திரம்—	௬௫௬௧	௬௫௬௧	௧௯௬௮௩	௩௨௮0௫
சங்கு—	௧௯௬௮௩	௧௯௬௮௩	௫௯0௪௯	௯௮௪௧௫
அனிகம்—	௫௯0௪௯	௫௯0௪௯	௧௭௭௧௪௭	௨௯௫௨௪௫

அக்குரோணி-௧௭௭௧௪௭, ௧௭௭௧௪௭, ௫௩௧௪௪௧, ௮௮௫௭௩௫,

இக்கணக்கின்படி, பாரதயுத்தத்தில், தருமர்பக்கம் ௭-அக்குரோணியும். துரியோதனன்பக்கம் ௧௧-அக்குரோணியும், ஆக, ௧௮-அக்குரோணி இருந்ததாக மகாபாரதம் கூறுகின்றது.

விவரம்.

தருமர்சேனை—

யானை	தேர்	குதிரை	காலாள்
௧௨௪00௨௯	௧௨௪00௨௯	௩௭௨00௮௭	௬௨00௧௪௫

துயோதனன்சேனை—

யானை	தேர்	குதிரை	காலாள்
௧௯௪௮௬௧௭	௧௯௪௮௬௧௭	௫௮௪௫௮௫௧	௯௭௪௩0௮௫

மொத்தம்,

யானை	தேர்	குதிரை	காலாள்
௩௧௮௮௬௪௬,	௩௧௮௮௬௪௬,	௯௫௬௫௯௩௮,	௧௫௯௪௩௨௩0,

இனி, வெள்ளமாவது—

அக்ரோணி	- ௮	- கொண்டது	—	ஏகம்
ஏகம்	- ௮	- கொண்டது	—	கோடி.
கோடி	- ௮	- கொண்டது	—	சங்கம்
சங்கம்	- ௮	- கொண்டது	—	விந்தம்
விந்தம்	- ௮	- கொண்டது	—	குமுதம்
குமுதம்	- ௮	- கொண்டது	—	பதுமம்
பதுமம்	- ௮	- கொண்டது	—	நாடு
நாடு	- ௮	- கொண்டது	—	சமுத்திரம்
சமுத்திரம்	- ௮	- கொண்டது	—	வெள்ளம்.

இப்படி-௭0 - வெள்ளம் வானரசேனை இராமருக்கு உதவிபுரிந்ததாக இராமாயணங் கூறும்.

(பத்திராசிரியர்.)

வசனக்குறிகள்.

(வசனம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.)

, காற்புள்ளி (காமா.)
; அரைப்புள்ளி (செமிகோலன்.)
: முக்காற்புள்ளி (கோலன்.)
. முற்றுப்புள்ளி (புல்ஸ்டாப்.)
“ ” மேற்கோள்குறி (கொடேஷன்.)
‘ ’ உள்மேற்கோள்குறி (ஷை.)
( ) விளக்கக்குறி (பிராக்கெட்.)
— கிறுபுள்ளி (டாஷ்.)
- சிறு கிறுபுள்ளி (ஹைப்பன்.)
* நக்ஷத்திரப்புள்ளி (ஸ்டார்மார்க்.)
! ஆச்சரியம் அல்லது இரக்கக்குறி.
? வினாக்குறி.

இன்னும் வேறுசிலகுறிகளும் உண்டு.

அவைகட்குள் மேற்காட்டியனவே பெரும்பாலும் வழங்குவதால், இவைகளை மட்டும், தனித்தனிவசனத்தில் இனி, உபயோகித்து விளக்கிக்காட்டுதும்.

(,) இக்காற்புள்ளியைப்பல வினைஎச்சங்களின் இடையிலும், ஆனால், ஆனாலும், ஆயினும், ஆகவே, ஆகையால், முதலியசொற்களின் ஈற்றிலும், ஒருவசனத்தில் ஒருபொருள்குறித்துவரும் பலசொற்களின் இடையிலும், பொருண்முடிவடையாத பலமுற்றுக்களின் ஈற்றிலும், வாக்கியநடுவில், வந்தால், போனால், போல, ஆல், என்பது, முதலிய மொழிகளீற்றிலும், அரச, ஐயா, முதலிய விளிப்பெயரின்பின்னும் உபயோகித்தல்வேண்டும்.
(ஒருவாக்கியத்தில் பலஎச்சங்கள்வரின், ஈற்றுஎச்சத்தின்பின் இக்காற்புள்ளி இடலாகாது)

(1) பலவினைஎச்சங்களின் இடையில் இக்காற்புள்ளிவருதல்:— சச்சந்தனென்னுமரசன் விஜயை என்பாளைமணந்து, அவளோடும் சுகித்திருப்பக்கருதி, கிமித்திகன் முதலியோரது உறுதிமொழி உட்கொள்ளானாய், கட்டியக்காரனையழைத்து, ‘நீ இந்நாட்டைக்காத்து வருகி’ எனவிதித்து, அந்தப்புரம் புகுந்து, தானெண்ணியவண்ணம் சுகித்திருந்தான்,

(தொடரும்)
தமிழ்மாணவன்.

ஸ்ரீ:

கவிச்சக்கரவர்த்தி கம்பநாட்டாழ்வார். சரித்திரம்.

கண்ணன் கழலிணை
எண்ணு மருந்திணை.

நேரிசை வெண்பா.

"தராதலத்தி னுள்ள தமிழ்க்குற்ற மெல்லாம்
அராவு மரமாயிற் றன்றே—யிராவணன்மேல்
அம்புநாட் டாழ்வா னடிபணியு மாதித்தன்
கம்பநாட் டாழ்வான் கவி"

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

"அம்பிலே சிலையை நாட்டி யமரர்க்கன் றமுத மீந்த
தம்பிரா னென்னத் தானுந் தமிழிலே தாலை நாட்டிக்
கம்பநா டுடைய வள்ளல் கவிச்சக்ர வர்த்தி பார்மேல்
நம்புபா மாலை யாலே நாருக்கின் றமுத மீந்தான்."

வேறு

"இம்பர் நாட்டிற் செல்வமெல்லா மெய்தி யரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா வோங்கு நீழ லிருந்தாலும்
செம்பொன்மேரு வனையபுயத் திறல்சேர் ராமன் றிருக்கதையில்
கம்ப நாடன் கவிதையிற்போற் கற்போர்க் கிதயங் களியாவே"

கம்பநாடரது சரித்திரத்தில்நாம்செல்லுதற்குமுன் அவரது காலத்துக்கு முற்பட்ட காலத்து நூற்களைப்பற்றியும், மதங்களைப்பற்றியும், அவரது காலத்தைப்பற்றியும், சிறிது கூறுதல்,இன்றியமையாததாயிருக்கின்றது. என்னெனின், அவை அவரது புலமையின்வளர்ச்சி, அவரது மனக்கோள், முதலியவற்றை நன்குணர்தற்கு ஏற்ற கருவிகளா யிருத்தலின் என்பது

கம்பநாடரது காலத்துக்கு முற்பட்டகாலத்து நூற்களும், மதங்களும்.

கம்பநாடரது காலம் இன்னதென நன்குவிளங்கினாலன்றி, அவரது காலத்துக்கு முற்பட்டகாலம் இன்னதென்பது விளங்காது. அதுவிளங்கினாலன்றி, அக்காலத்து நூற்களும், மதங்களும் இவையென்பது இனிதுவிளங்காது. ஆதலின்,அவரது காலமே

முன்னே கூறற்குரியதாகும். அங்ஙனமாகவும் அவரது காலத்துக்கு முற்பட்டகாலத்து நூற்களையும், மதங்களையு முன்னேகூறப்புகுந்ததென்னெனின், அவரதுகாலம் அவரதுசரித்திரத்தோடு தொடர்புடையதாகலானும், அவரது காலத்தைக்கூறிப் பின்னர் அவரது காலத்துக்கு முற்பட்டகாலத்து நூற்களையும், மதங்களையுங் கூறப்புகின், இடையீடுபடுமாகலானும் என்பது.

கம்பநாடர் காலத்துக்குநேர் முற்பட்டகாலம் முதலாங்குலோத்துங்கன் காலமும், விக்கிரமச் சோழனுடைய ஆட்சியின் தொடக்கக்காலமுமாகும். அக்காலம் கி-பி-1070 ௵ முதல் 1120 ௵ வரையிலுமாகும். அக்காலம் இஃதாமென்பது பிற்கூறுவனவற்றால் இனிது விளங்கும்.

நாம் அதனோடு நின்றுவிடாமல் அதற்குச்சேய்மையாக முன்சென்று பார்த்தல்வேண்டும். எவ்வளவு சேய்மைவரையிலும் முன்சென்று பார்த்தல்வேண்டுமெனின், கடைச்சங்கக்காலம் வரையிலுஞ்சென்று பார்க்கவேண்டும். முற்காலத்தைப்பற்றி ஈண்டுச் சொல்லத்தொடங்கிய முறையில் அதுவரையிலுஞ் சென்று பாராவிடின் விஷயம் வேண்டியவளவு சொல்லப்பட்டதாகாது.

கடைச்சங்கந் தொடங்கியகாலம் இது, அதுமுடிவுற்றகாலம் இது, எனநாம்வரையறுத்துக்கூறுதல்முடியாது. ஆனாற்பலர் கடைச்சங்கம் ஆயிரத்தெண்ணூறு வருடங்களுக்குமுன் இருந்திருக்கலாம் என்று கூறுகின்றனர். அஃதெங்ஙனமாயினுமாக. கடைச்சங்கத்தில்இருந்த புலவரைப்பற்றியும், அக்காலத்திருந்த வேறுபலமுடையாரைப்பற்றியும் அக்காலத்துத தோன்றிய நூற்களைப்பற்றியும், சிறிது கவனிப்போம்.

கடைச்சங்கக் காலத்தார் மதமும், அக்காலத்து நூற்களும்.

கடைச்சங்கத்தில் இருந்தபுலவர்களிற் சிலர்பௌத்தராகவும், சிலர் சமணராகவும், சிலர் வைஷ்ணவராகவும், சிலர் சைவராகவும் இருந்தார்கள்.

தமிழ்மொழியை ஆய்தலும் அதனைவளர்த்தலுமே, அக்காலத்துப் புலவர்களின் முதற்கடமையாகும். அவரவர்களுடைய மனக்கோளின்படி அவரவர்கள் விரும்பிய மதங்களையே அவரவர்கள் கொண்டொழுகிவந்தார்கள். அவர்கள் மதங்கள்பற்றி ஒருவரோடொருவர் பிணங்கி நின்றவர்கள் அல்லர்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத் தக"

என்றபடி கற்பனவற்றைக் கசடறக்கற்றலும், கற்றபின் அவற்றின்படி நன்னெறியில் நிற்றலுமே, அவர்களுடைய உறுதியாகிய மனநிலைமை.

கடைச்சங்கக் காலத்தில் இந்நான்குமதங்களும் இருந்தன என்பதற்கு அச்சங்கநூற்களிலிருந்தே பலசான்றுகளை எடுத்துக் காட்டுதல்கூடும்.

மணிமேகலை என்னுங் காப்பியம், பௌத்தமதத்து நூலே; அக்காப்பியத்தின் கதைத்தலைவியாகிய மணிமேகலையும்; அவள்தாயாகிய மாதவியும் முன்னே சமணமதத்தவர்களாயிருந்து பிறகு பௌத்தமதத்தைத்தழுவியவர்கள். சிலப்பதிகாரத்தின் கதாநாயகனாகிய கோவலனும், அவன்மனைவியாகிய கண்ணகியும், சமணமதத்தினர்; அவர்கள் மதமாறியவர்கள் என்று அக்காப்பியத்திற் கூறப்படாமையின், அவர்களுடையபெற்றோர்களின்மதமும் அதுவேயென்பது இடர்ப்பாடுடையதன்று. மணிமேகலையின் தாயாகிய மாதவி, அக்கோவலனுடைய காதற்கணிகை. மணிமேகலை அவனுக்கு அவள் வயிற்றிற் றோன்றியவள். ஏலாதியின் நூலாசிரியர் அந்நூலில் அருகக்கடவுள்வணக்கங்கூறியிருக்கின்றனர். ஆசாரக்கோவையின் நூலாசிரியராகிய பெருவாயின் முள்ளியார், சிவவணக்கங் கூறியிருக்கின்றனர். திரிகடுகநூலாசிரியரும், நான்மணிக்கடிகைநூலாசிரியரும், அந்நூற்களில் திருமால்வணக்கங் கூறியிருக்கின்றனர். சைவரிற் சிலர் அந்நூற்களிலுள்ள திருமால் வணக்கச்செய்யுட்கள் பிற்காலத்தாரால் பாடிச்சேர்க்கப்பட்டவை என்கின்றனர். அச்செய்யுட்களைப்பழைய உரையாசிரியர்கள் மேற்கோள்களாக எடுத்துக் காட்டியிருத்தலானும், அந்நூற்களின்பழையஉரையினும் அச்செய்யுட்கள் காணப்படுதலானும் அவர்கள்கூற்று முன் பின் ஆராய்ந்துணராத கூற்றெனவிடுக்க. பாரதம்பாடிய பெருந்தேவனாரும், கபிலரும், விஷ்ணுவணக்கம், சிவவணக்கமாகிய இருகடவுளர்வணக்கமுங்கூறி இருக்கின்றனர். கவிசாகரப்பெருந்தேவனார் "தேவில் திருமாலெனச்சிறந்த தென்பவே, பாவிற்கு வள்ளுவர் வெண்பா" என்று கூறினர், திருவள்ளுவமாலையில். நாலடியாரைப்பாடியவர்கள் சமணமுனிவர்கள். பழமொழிபாடிய முன்றுறையரையனார் சமணரென்பது அந்நூலின்சிறப்புப்பாயிரத்தால்இனிதுவிளங்கும் (தொடரும்.)

கோவிந்தராஜமுதலியார்,

பச்சையப்பன்கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர், சென்னை.

சீரளவில்லாத் திகழ்தரு கல்விச் செம்பொன்மலையின், சிகரத்தில்விளங்குந் தேசிகோத்தமராய், கருணையோருருக்கொண்டனையராய், பிரசங்காமிர்தம் பெய்யுமுகிலாய், விளங்குகின்ற, புலிசை, ஸ்ரீமத், ஞானியார்மடாலயத்து, ஸ்ரீ ல ஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியசுவாமிகளின் அருணோக்கமடைகின்றது இத்தமிழ்மகவாதலின், என்றுங் குன்றாத எழில்பெற்றுவளர்ந்துவரும் என்பது நிச்சயம்.

இத்தமிழ்மகவைத் தடையின்றி வெளியிடுக. பொருண்முட்டுப்பட்டவழி "யாம் அதனை நீக்குகின்றோம்" எனவாக்குதவிய பெருந்தகையாளர்க்குப் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுளது நமது புதுவைத் தமிழ்ச்சங்கம்.

பத்திரிகைக்கு விஷயம் எழுதுவோர், பரதூஷணம் இராஜநிந்தனை முதலியன இன்றித் தெள்ளிய வசனநடையில், [illegible]னால் எழுதி அனுப்பல் வேண்டும். மறுக்கப்பட்ட விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா. விஷயங்களை அறியவிரும்புவோர் ரிப்ளை கார்ட்டெழுதினால் பதில்கிடைக்கும்.

நீதிசாஸ்திரம்.

நீதிசாஸ்திரம் என்ற சமஸ்கிருதத்துள்ள நூலை தமிழ் உரையுடன் சுலோகத்தையும் தமிழ் எழுத்துக்களாலேயே எழுதிச் சிறுபுத்தகமாக அச்சிட்டு வெளியிடப்பட்டு இருக்கிறது. இது ஒவ்வொரு மனிதர்கரத்தும் இருக்கவேண்டியது அவசியம்.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

விலை அணா [illegible].

P. L CASYRAM SINGH & SONS'

GENERAL MERCHANTS

PONDICHERRY.

அறிவிப்பு

தமிழ்மகவு

"தமிழ்மகவு" எனப்பெயரிய இப்பத்திரி[illegible] ஒழுக்கம், தர்மம், பக்தி, ஞானம், இலக்கண இலக்கிய ஆராய்ச்சி முதலியபல இன்றியமையாத விஷயங்களோடு வெளியிடப்பட்டு வரும்.

தற்போதுள்ள காகிதப்பஞ்சத்தில் தொடக்கப்பெற்றும் வருடச்சந்தா மிகக்குறைவாகவே வைத்திருப்பதைக் கவனிப்பார்களாயின் இது தமிழின் வளர்ச்சிகருதி எடுத்த முயற்சி என்று எண்ணாமல் இரார்.

தமிழ் நலநுகர்வீர்!

இத்தமிழ்மகவைத் தங்கள்நண்பர் முதலியோர்க்குக்காட்டி அவர்களையும், இதன் இன்மழலைகேட்டு நன்மகிழ்வெய்தும்படி இசைத்துத் தமிழ்தழைகவென வாழ்த்துக்கூறித் தமிழபிமானசீலர்கள் எனச் சிறப்புப்பெயர் எய்துமின்.

௧௦ - சந்தாதாரர்களைச் சேர்த்து முற்பணம் அனுப்பும்படி செய்பவர்கட்கு இனாமாகப் பத்திரிகை மாதந்தோறும் அனுப்பப்படும்

பிரான்சுதேசத்திற் றற்போதுள்ள இடுக்கண்நீங்கி இன்பம் பெருகுமாறு, எல்லாம்வல்ல இறைவன் திருவருள்புரிக.

இப்பத்திரிகை, எஞ்ஞான்றும், இடையூறின்றி இனிதுவளர்ந்து விளங்குதற்கு எமது தமிழ்த்தெய்வத்தின் தாண்மலர்தலைமேற் கொள்ளுதும்.